# 12 - ஆம் வகுப்பு --- வணிகவியல்

## ஒருமதிப்பெண் வினாக்கள்

1. பின்வருவனவற்றில் எவை அமைப்பின் கோட்பாடுகளில் இடம் பெறாதவை?
   அ. ஒரு முனை இயக்கம் ஆ. கூட்டாண்மை இ. கட்டுப்பாட்டு வீச்செல்லை
   ஈ. தரவரிசைக் கோட்பாடு

2. எவை சரியாக பொருந்தவில்லை?
   அ. எல்லாம் அவரே, அவரே எல்லாமும் - தனியாள் வணிகம்
   ஆ. கூட்டாளிகளின் அமைப்பு - நிறுவனம்
   இ. இந்து கூட்டு குடும்ப உறுப்பினர்கள் - கர்த்தா
   ஈ. ஒரு நபர் ஒரு வாக்கு - கூட்டுறவு

3. பொருத்துக
   1. வேலைப்பகிர்வு -- a. கட்டளை இணைப்பு
   2. ஒப்படைவு -- b. துறைப்படுத்துதல்
   3. தரவரிசைக் கோட்பாடு -- c. ஒருமித்த உத்தரவு
   4. கட்டளையொருமை -- d. ஒப்படைத்தல்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | a | b | c | d |
| ஆ. | b | d | a | c |
| இ. | c | d | a | b |
| ஈ. | d | a | b | c |

4. தவறான கூற்று எது?
   தனியாள் வணிகம் ------
   அ. குறைந்த முதல் தேவைப்படும் தொழில்.
   ஆ. விரைவான முடிவு எடுக்கப்படும் தொழில்.
   இ. இந்தியாவில் மட்டுமே காணப்படும் தொழில்.
   ஈ. பலர் கடன் தர முன்வருவர்.

5. மன்னர்களாக மதிக்கப்படுபவர்கள் யார்?
   அ. வாடிக்கையாளர்கள் ஆ. நுகர்வோர்கள் இ. வியாபாரிகள் ஈ. பணியாளர்கள்

6. தனியாள் வணிகம் துவங்க --------
   அ. குறைந்தது இரு நபர்கள் தேவை ஆ. குறைந்தது ஏழு நபர்கள் தேவை
   இ. ஒரு நபர் மட்டும் தேவை ஈ. இவற்றில் ஏதும் இல்லை

7. பின் வருவனவற்றில் எவை சரியானவை ?
   அ. கூட்டாண்மை பதிவு - கட்டாயம்
   ஆ. கூட்டாண்மை ஏற்படுவது - சட்டத்தின் படி
   இ. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது - அரசின் வழிக்காட்டல்
   ஈ. தற்காலிகமான கூட்டாண்மை - இணைவினை

8. பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கு ஏற்ற உகந்த தொழில்முறை அமைப்பு ------------
   அ. வாரிய அமைப்பு ஆ. பொதுக்கூட்டுரு இ. துறைமுறை அமைப்பு

9. வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   (அ) தெஜிவாலா (ஆ) தாராவணிவாலா (இ) மண்டிவாலா (ஈ) முனைம வேட்டையாளர்



10. கீழ்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க:
   கூற்று ( A ) : ஓர் அமைப்பு என்பது மனித வாழ்வில் அனைத்து முக்கிய தருணங்களிலும் பரவியுள்ளது.
   கூற்று ( B ) : அமைப்பை பற்றிய அறிவு,ஒரு மேலாளருக்கு பணியைத் திறம்பட செயல்படுத்த உதவுது இல்லை.

   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடைகளை தேர்ந்தெடுக்கவும்
   அ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் சரி ஆ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் தவறு
   இ. ( A ) சரி , ஆனால் ( B ) தவறு ஈ. ( A ) தவறு, ஆனால், ( B ) சரி

11. பொருத்துக
   1. இந்து வாரிசு சட்டம் --- a. 1912
   2. இங்கிலாந்தில் கூட்டாண்மை சட்டம் --- b. 1985
   3. இந்திய கூட்டாண்மை சட்டம் --- c. 1932
   4. கூட்டுறவு சட்டம் --- d. 1956
   --- e. 1907

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | d | e | b | a |
| ஆ. | b | e | a | c |
| இ. | c | a | b | e |
| ஈ. | d | e | c | a |

12. தவறானதை தேர்ந்தெடுக்கவும்.
   (அ) "எல்லாம் அவரே, அவரே எல்லாமும்" என்ற கோட்பாட்டின்படி இயங்கும் அமைப்பு தனியாள் வணிகம் ஆகும்.
   (ஆ) இந்து கூட்டுக் குடும்பத்தில்,வணிகத்தை கர்த்தா நடத்துவார்.
   (இ) மிட்டக்சாரா, தாயபாகா என்பவை கூட்டாண்மையின் இரு சட்டங்கள் ஆகும்.
   (ஈ) பல நபர்களின் சங்கமம் கூட்டுபங்கு நிறுமம் ஆகும்.

13. சரியானதை தேர்ந்தெடுக்கவும்.
   (அ) சிறுதுளி பெருவெள்ளம் என்ற கோட்பாடு கூட்டுப்பங்கு நிறுமத்திற்குப் பொருந்தும்.
   (ஆ) அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய அதிகபட்ச பங்கு முதல் 51%
   (இ) "தனக்காக தானே வியாபாரத்தை நடத்தும் ஒரு நபர் தனி வணிகர் ஆவார்" என்பது ஜேம்ஸ் ஸ்டீபன்சன் என்பவரின் கூற்று.
   (ஈ) பங்கு மாற்றகங்கள், வாணிக கொள்திறனை குறைக்கின்றன.

14. ஒரு பங்குச் சான்றிதழ் வெளிப்படுத்துவது :
   அ) பங்குதாரரின் பெயரை ஆ) பங்குகளின் எண்ணிக்கையை
   இ) பங்குகளின் தனிப்பட்ட எண்களை ஈ) இவை அனைத்தும்

15. பின்வருவனவற்றில் எது நிறுமத்தின் சிறப்புக் கூறுகள் அல்ல?
   அ) வரையறா பொறுப்பு ஆ) நீடித்த வாழ்வு இ) தனிநபர் சட்ட தன்மையுடையது
   ஈ) பொது முத்திரை

16. தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்
   ஒரு பங்கு சான்றிதழ் வெளிப்படுத்துவது ---------
   அ) பங்குதாரரின் பெயரை ஆ) பங்குகளின் எண்ணிக்கை
   இ) பங்குகளின் தனிப்பட்ட எண்களை ஈ) பங்குகளின் மீது செலுத்த பெறாத தொகை



https://www.trbtnpsc.com/2016/10/how-to-attend-creative-and-interior.html

17. தவறான கூற்று எது?
அ) பங்குதாரர்கள் நிறுவனத்தின் உறுப்பினர்கள் ஆவர்.
ஆ) ஒரு கூட்டுப் பங்கு நிறுவனத்தின் பங்குதாரர் பெறுவது வட்டி.
இ) பங்குகளை வட்டத்தில் வெளியிடும்போது அதிகபட்ச தள்ளுபடி 10%
ஈ) அழைப்பு பணத்தை செலுத்த குறைந்தது 14 நாள் அறிவிக்கை தரப்பட வேண்டும்.

18. பொருத்துக
1. தகவல் அறிக்கை. --- a. 2 பேர்
2. தனி வரையறு நிறுவனத்தில் குறைந்த அளவு இயக்குனர். ---- b. மாற்றத்தக்கது
3. இயக்குனர் --- c. 90 நாட்கள்
4. பொது வரையறு நிறுவனத்தின் பங்குகள் --- d. நிறுமத்தின் முகவர்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | a | b | c | d |
| ஆ. | b | d | a | c |
| இ. | c | a | d | b |
| ஈ. | d | a | b | c |

19. பின்வருவனவற்றில் தறானது எது ?
அ. இந்திய நிறுமச் சட்டம் --- 1956
ஆ. இந்தியாவி கூட்டாண்மைப் பதிவு --- 1932
இ. இந்து வாரிசு சட்டம் --- 1983
ஈ. இங்கிலாந்தில் கூட்டாண்மை பதிவு --- 1907

20. சரியான ஒன்றை தேர்ந்தெடுக்கவும் :
அ. உழைக்கும் கூட்டாளி --- முதலிடும் கூட்டாளி
ஆ. பெயரளவு கூட்டாளி --- பாசாங்கு கூட்டாளி
இ. உழையா கூட்டாளி --- துணைக் கூட்டாளி
ஈ. இளவர் கூட்டாளி --- பொதுக் கூட்டாளி

21. கீழ்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க:
<u>கூற்று ( A )</u> : பகராள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால், அங்கு பேசும் உரிமை அவருக்கு இல்லை.
<u>கூற்று ( B )</u> : ஒன்றுக்கு மேற்பட்ட பகராள்களை ஒரு உறுப்பினர் தன் சார்பில் நியமிக்க முடியாது
<u>கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடைகளை தேர்ந்தெடுக்கவும்</u>
அ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் சரி ஆ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் தவறு
இ. ( A ) சரி , ஆனால் ( B ) தவறு ஈ. ( A ) தவறு, ஆனால், ( B ) சரி

22. வேறுபட்ட ஒன்று எது?
அ) பங்குதாரர் ஆ) பொதுத்துறை நிறுவனங்கள் இ) மருத்துவர்கள்
ஈ) சில்லறை விற்பனை நிலையங்கள்

23. தனிநபர் கட்டுப்பாட்டின் குறைகள் ---------
(i) அளவான முதல் (ii) பேரளவு தொழில் (iii) நிலைத்த தன்மை
(iv) மேலாண்மைக்கு எல்லை உண்டு
<u>சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.</u>
அ. (iii) மட்டும் தவறு ஆ. (iv) மட்டும் தவறு இ. (ii) மற்றும் (iii) தவறு ஈ. அனைத்தும் தவறு



24. ஒவ்வொரு கூட்டாளியும் தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பனம் மீது ஆண்டுக்கு --------- வட்டிபெற உரிமை உண்டு.
அ) 6 % ஆ) 10 % இ) 12 % ஈ) 5 %

25. முன்னுரிமைப் பங்கு முன்னுரிமை பெற்றிருப்பது -------
(அ) பங்காதாயம் பெறுவதில் மட்டும் (ஆ) வாக்குரிமையைச் செலுத்துவதில்
(இ) பங்காதாயம் பெறுவதிலும் நிறுமம் கலைப்பின்போழ்து பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும்

26. பொது வரையறை நிறுமத்தில் குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை --------
(அ) 2 (ஆ) 5 (இ) 7 (ஈ) 10

27. ஒரு நிறுமத்தின் செயல்பாட்டு எல்லையை உணர்த்தும் ஆவணம் ---------
(அ) நிறுமத்தின் அமைப்பு முறையேடு (ஆ) நிறுமச் செயல் விதிகள்
(இ) தகவலறிக்கை (ஈ) சட்டமுறை உறுதி விளம்பர்

28. ஒரு பொதுவரையறு நிறுமத்தில் இயக்குநர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் மதிப்பு -----------
(அ) ₹. 5,000 (ஆ) ₹. 5,00,000 (இ) ₹. 50,000 (ஈ) ₹. 500

29. இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்களுக்கு இடையே உள்ள கால இடைவெளி ----------
(அ) 12 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்
(ஆ) 15 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்
(இ) 18 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்

30. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டிருக்கிறது ---------
(அ) சரக்கு (ஆ) சேவை (இ) நிதி பத்திரங்கள் (ஈ) நாட்டின் பணம்

31. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர் ---------
(அ) கலைமான் (ஆ) கரடி (இ) காளை (ஈ) முடவாத்து

32. முதன் முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு -------------
(அ) இங்கிலாந்து (ஆ) அமெரிக்கா (இ) சுவிஸ் (ஈ) இந்தியா

33. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் பழமையானது -------------
(அ) துறைவாரி அமைப்பு (ஆ) பொதுக் கழகம் (இ) அரசு நிறுமங்கள் (ஈ) வாரிய அமைப்புகள்

34. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் என்பவர், அதன் -----------
அ) கடனாளர்கள் ஆ) உறுப்பினர்கள் இ) கடன் வாடிக்கையர் ஈ) நிறுமத்தில் கடன்

35. பத்திரங்கள் ஒப்பந்த ( ஒழுங்குபடுத்துதல் ) சட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்டது.
(அ) 1952 (ஆ) 1956 (இ) 1964 (ஈ) 1966

36. பங்காதாயம் கூட்டுறவில் ------------ அடிப்படையில் உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.
(அ) பங்கு முதல் (ஆ) பங்குகள் வாங்கிய எண்ணிக்கையில் (இ) ஆதரவின்
(ஈ) இவை ஏதுமில்லை.


https://www.trbtnpsc.com/2016/10/how-to-attend-creative-and-interior.html

37. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கீழ்க்கண்டவற்றுள் எந்நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளப்பட மாட்டாது?
அ. தணிக்கையர் நியமனம் ஆ. கடனீட்டுப் பத்திர வெளியீடு
இ. பதவி விலகுமிடத்திற்கு இயக்குநர்களை நியமித்தல் ஈ. பங்காதாயம் விளம்பப்படல்.

38. ---------- என்பது தனியாள் வணிகத்திலுள்ள குறைகளை நீக்க ஏற்படுத்தப்பட்ட வணிக அமைப்பு ஆகும்.
அ) இந்து கூட்டுக்குடும்பம் ஆ) கூட்டாண்மை
இ) கூட்டுப்பங்குநிறுமம் ஈ) கூட்டுறவுச்சங்கம்

39. எவை சரியாக பொருந்தவில்லை?
அ) கரடி - மண்டிவாலா
ஆ) பொதுமுத்திரை - பொதுஇலச்சினை
இ) வேலைபகிர்வு - துறைப்படுத்துதல்
ஈ) உழைக்கும் கூட்டாளி - முதலிடும் கூட்டாளி

40. தவறான ஒன்று எது?
அமைப்பு என்பது --------
அ) ஆணையுரிமைகளை வரையறுத்து வழங்குதல்
ஆ) மனித வாழ்வில் அனைத்து முக்கிய தருணங்களிலும் பரவியிருப்பது
இ) துறைப்படுத்துதல், பணிகளை ஒப்படைப்பது
ஈ) ஒருதலைமையும், பல்வேறு திட்டமிடலும் கொண்டது

41. கீழ்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க:
கூற்று ( A ) : கூட்டுருவாக்கம் பெறாத நிறுவனங்களில், உரிமையாளர்களும் தொழிலும் வெவ்வேறாகவே கருதப்படுகிறது
கூற்று ( B ) : கூட்டுருவாக்கம் பெற்ற அமைப்புகள் தனக்கென்ற ஒரு சட்டத் தன்மையைப் பெற்று உரிமையாளர்களிடமிருந்து தனித்த ஒரு இயக்கமாகச் செயல்படுகிறது
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடைகளை தேர்ந்தெடுக்கவும்
அ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் சரி ஆ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் தவறு
இ. ( A ) சரி , ஆனால் ( B ) தவறு ஈ. ( A ) தவறு, ஆனால், ( B ) சரி

42. பின் வருவனவற்றில் எவை சரியானவை ?
அ) இந்து கூட்டுக் குடும்ப வணிக அமைப்பு உலகெங்கும் காணப்படுகின்றது
ஆ) இந்து எனப்படுபவர் ஐந்து தலைமுறையைச் சேர்ந்த வம்சாவழி சொத்து உரிமையர் ஆவார்
இ) இந்து கூட்டுக்குடும்பத்தைப்பற்றி சட்டம் எந்த வரைவிலக்கணமும் தரவில்லை
ஈ) குடும்ப உறுப்பிணர்கள் தங்களுக்குள் ஒப்பந்தம் மேற்கொண்டு தொழிலை மேற்கொள்வர்

43. வேறுபட்ட ஒன்று எது?
அ) தரகர்கள் ஆ) துணைத்தரகர்கள் இ) தன்வணிகர்கள் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

44. பின் வருவனவற்றில் எவை சரியானவை ?
அ) கூட்டாண்மையை இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1956 நெறிப்படுத்துகிறது.
ஆ) இந்தியாவில் கூட்டாளியின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.
இ) வரையறுத்த கூட்டாண்மை இந்தியாவில் இல்லை.
ஈ) எஜமானர் மற்றும் பணியாளர் என்ற உறவு கூட்டாண்மையில் உண்டு.

45. எவை சரியாக பொருந்தவில்லை?



அ. பகராள் - பதிலாக
ஆ. உசித ஆணை - தன்விருப்புரிமை
இ. பலமிக்கவன் - கர்த்தா
ஈ. ஒரு நபர் ஒரு வாக்கு - கூட்டுறவு

46. பொருத்துக
1. ஆயத்துக் கொடுப்பு ஒப்பந்தம் -- a. கழிவு முகவர்
2. தரகர்கள் -- b. சிறு முதலீட்டாளர்கள்
3. தீர்வடையா பத்திரம் -- c. அவ்விடத்திய பேரங்கள்
4. பரஸ்பர நிதிகள் -- d. ரொக்கப் பட்டியல் பத்திரம்
-- e. முன்னோக்கியப் பட்டியல் பத்திரம்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | e | b | c | d |
| ஆ. | d | e | a | c |
| இ. | c | a | e | b |
| ஈ. | c | a | d | b |

47. கூற்று (A) : ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளருக்குச் சில பணிகளை ஒப்படைக்கிறார்
காரணம் (R) : ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்குப் பொறுப்பாகிறார்.
அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு
ஈ) A தவறு ஆனால் R சரி

48. தவறானதை தேர்வு செய்க.
அ) ஒப்படைவு என்பது ஒப்படைத்தல் ஆகும்.
ஆ) அரசாங்கத்தின் கொள்கைகள் பன்னாட்டு நிறுமத்திற்கு சாதகமாக உள்ளது.
இ) ஒரு நிறுமம் என்பது புனைவு நபராக கருதப்படுகிறது.
ஈ) அரசு நிறுமத்தில் ஊழியர் அரசு ஊழியர்.

49. கூற்று (A) : தனியார் வணிகத்தில் உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
காரணம் (R) : இவ்வரையறாப் பொறுப்பினால் தனிவணிகர் தன் வியாபாரக் கடன்களைச் செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிடில், தன் சொந்த சொத்துகளிலிருந்து கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.
அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு
ஈ) A தவறு ஆனால் R சரி

50. தவறானதை தேர்ந்தெடுக்கவும்
அ. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர், கரடி ஊக வணிகர்
ஆ. இந்தியாவில் உள்ள ஏற்பிசை பெற்ற பங்கு மாற்றகங்களின் எண்ணிக்கை 21
இ. புதிய பத்திரங்களை வெளியிடுவதற்கு பெரும்பாலானோர் மேற்கொள்ளும் முறை



https://www.trbtnpsc.com/2016/10/how-to-attend-creative-and-interior.html

பொதுவிடுப்பு ஆகும்.

ஈ. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்ட ஊக வணிகர் கரடி

51. கீழ்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க:

கூற்று ( A ) : பட்டியலிடப்படுவதால், ஒரு நிறுமம் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுகிறது.

கூற்று ( B ) : நிறுமத்தின் பங்குகளுக்கான சந்தையை விரிவாக்கி, எதிர்காலத்தில் தேவையான முதலை எளிதில் பெறுவதற்கு பட்டியலிடுதல் உதவுகின்றது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடைகளை தேர்ந்தெடுக்கவும்

அ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் சரி ஆ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் தவறு

இ. ( A ) சரி , ஆனால் ( B ) தவறு ஈ. ( A ) தவறு, ஆனால், ( B ) சரி

52. பின் வருவனவற்றில் எவை தவறானவை ?

1. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்ற தொழில்கள் சிற்றளவு வியாபாரம்
2. தனியாள் வணிகத்தில் வியாபார ரகசியங்களைக் காக்க இயலாது
3. தனியாள் வணிகத்தில் விரைவாக முடிவு எடுக்கப்படும்
4. ஒப்பந்தம் , பதிவு முதலியன தனியாள் வணிகத்திற்கு தேவை.

அ) 1 மற்றும் 4 ஆ) 1 மற்றும் 3 இ) 2 மற்றும் 4

53. குறிப்பிட்ட வணிக செயல் அல்லது வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து கொடுக்க உருவாக்கப்பட்ட தற்காலிக கூட்டாண்மை ---------

அ) விருப்பமுறிக் கூட்டாண்மை ஆ) இணைவிணை இ) பொதுக் கூட்டாண்மை

54. பொது மக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்:

அ) துறைவாரி அமைப்பு ஆ) பொதுக்கழகம் இ) அரசு நிறுமம்

ஈ) மேற்கண்ட அனைத்தும்

55. கூட்டாண்மை நிறுவனத்தில் மேலாண்மையில் அதிக பங்கு வகிக்கும் கூட்டாளி ---------------

(அ) பொது கூட்டாளி (ஆ) உறங்கும் கூட்டாளி (இ) இரகசிய கூட்டாளி

(ஈ) முரண்தடை கூட்டாளி

56. தன் வணிகர்கள் பங்குமாற்றங்களில் இவர்களுக்கான வாணிகத்தில் ஈடுபடுகிறார்கள் :

(அ) வடிக்கையாளர்களுக்காக (ஆ) தங்களுடைய சொந்த நடவடிக்கைகளுக்காக

(இ) மற்ற உறுப்பினர்களுக்காக (ஈ) மேற்கண்ட அனைவருக்காகவும்

57. பொதுத் துறை அமைபில் மிகவும் பழமையானது --------

அ) வாரிய அமைப்பு ஆ) துறைமுறை அமைப்பு இ) அரசு நிறுமம்

58. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு ---------

அ) தனி வணிகர் ஆ) கூட்டாண்மை இ) கூட்டுப் பங்கு நிறுமம்

59. பன்னாட்டு நிறுவனம் எனப்படுவது ---------- என அழைக்கப்படுகிறது.

அ) உலக அளவில் பெரியது ஆ) உலக வியாபாரம்

இ) பன்னாட்டு வியாபாரம் ஈ) மேற்சொன்ன அனைத்தும்

60. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனி வணிகருக்கு ஏற்றது?

அ) தனி நபர் உரிமை ஆ) தனி மனித கட்டுப்பாடு

இ) எல்லா இலாபமும் வணிகருக்கே ஈ) மேற்சொன்ன அனைத்தும்



61. கூற்று (A) : கூட்டுறவு சங்கத்தில் 'ஒரு பங்கு ஒரு வாக்கு' முறை கடைபிடிக்கப்படுகிறது.

காரணம் (R) : ஒரு கூட்டுறவு சங்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் சமம்

அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்

இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

62. கூற்று (A) : ஒரு நிறுமம் என்பது புனைவு நபர் என அழைக்கப்படுகிறது.

காரணம் (R) : ஒரு நிறுமம் கூட்டுருவாக்கம் செய்வதன் மூலம் சட்ட உரு பெறுகிறது.

அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்

இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

63. வேறுபட்ட ஒன்று எது?

அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டாண்மை

இ) கூட்டுறவு சங்கங்கள் ஈ) இந்துக் கூட்டுக் குடும்பம்

64. இது அரசுக்கு சொந்தமாகவும் அதன் கட்டுப்பாட்டின் கீழும் இருக்கும்--------

அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டாண்மை

இ) அரசுத் தொழில்கள் ஈ) கூட்டுப் பங்கு நிறுமம்

65. ஒரு கூட்டுறவுச் சிறப்பங்காடி அளிப்பது ---------

அ) கடன் ஆ) சேவை இ) சரக்குகள் ஈ) ரொக்கம்

66. கூட்டாண்மையை பதிவு செய்தபின், பதிவாளர் வழங்கும் சான்றிதழின் பெயர் ------------

அ) கூட்டாண்மை சான்றிதழ் ஆ) பதிவுச் சான்றிதழ் இ) உரிமைச் சான்றிதழ்

67. பொருத்துக

1. துறைப்படுத்துதல் – a. தனித்தியங்கல்
2. கூட்டுப்பங்கு நிறுமம் – b. கூட்டுத் தீர்மானித்தலின் பயனின்மை
3. கூட்டுறவுச் சங்கம் – c. பதிவு அவசியம்
4. தனிவணிகர் – d. கொள்முதல் அடிபடையில் பங்காதாயம்

– e. நடவடிக்கைகளை தொகுதிகளாகப் பிரித்தல்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | e | b | c | d |
| ஆ. | d | c | a | e |
| இ. | c | a | e | b |
| ஈ. | e | a | d | b |

68. கூட்டாண்மை பதிவு ----------

அ. கட்டாயம் ஆ. விருப்பத்தின் பேரில் இ. அவசியமில்லை

69. கூட்டாண்மை உடன்பாடு ----------

அ. கட்டாயம் ஆ. விருப்பத்தின் பேரில் இ. அவசியமில்லை

70. எது புதிய முதலை திரட்டுவதற்கு நிறுமம் விடுப்பது இல்லை?

அ. பொது வெளியீடு ஆ. உரிமை வெளியீடு இ. மேலூதியப் பங்குகளை விடுத்தல்



https://www.trbtnpsc.com/2016/10/how-to-attend-creative-and-interior.html

71. கூற்று (A) : எற்கனவே ஒரு வியாபாரத்தை நடத்தி வரும் ஒரு தனி நபர், தனது வணிக அமைப்பை விரிவுபடுத்த மேலும் ஒரு சிலரை இணைத்து கூட்டாண்மை அமைப்பை உருவாக்கலாம்.

காரணம் (R) : இரண்டோ, அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்களோ ஒரு ஒப்பந்தத்தின் முலம் இணைந்து கூட்டாண்மை அமைப்பை ஏற்படுத்தலாம்.

அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

72. ------------- போன்றவர்கள் புதிய விடுப்புகளை வெளியிட நிறுமங்களுக்கு உதவுவார்கள்.
அ. தரகர்கள் ஆ. வெளியீட்டகங்கள் இ. ஒப்புறுதியாளர்கள் ஈ. மேற்கண்ட அனைத்தும்

73. கீழ்க்கண்டவற்றைப் பொருத்திக் காட்டுக
1. நீடித்த வாழ்வு ---- a. பங்கொப்பு உட்பிரிவு
2. ஒப்புதல் உட்பிரிவு ---- b. தனி ஏற்பாட்டில் பங்கு முதல் திரட்டுதல்
3. செயல்முறை விதிகள் --- c. உறுப்பினரிடையே மாற்றமிருப்பினும் தொடர்ந்து செயல்படுதல்
4. தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை --- d. அட்டவணை - அ

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | a | b | c | d |
| ஆ. | b | d | a | c |
| இ. | c | a | d | b |
| ஈ. | d | a | b | c |

74. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் பங்குகள்-------------
அ. மாற்ற முடியும் ஆ. திருப்பி செலுத்தக் கூடியது இ. மாற்ற முடியாது

75. சிறுபான்மையினர் நலத்தைப் பாதுகாக்கும் தொழில் அமைப்பு எது?
அ. தனி வணிகம் ஆ. கூட்டாண்மை இ. கூட்டுறவுச் சங்கங்கள் ஈ. பொது நிறுமம்



## விடைகள்

1. ஆ. கூட்டாண்மை
2. இ. இந்து கூட்டு குடும்ப உறுப்பினர்கள் - கர்த்தா
3. ஆ. b d a c
4. இ. இந்தியாவில் மட்டுமே காணப்படும் தொழில்.
5. ஆ. நுகர்வோர்கள்
6. இ. ஒரு நபர் மட்டும் தேவை
7. ஈ. தற்காலிகமான கூட்டாண்மை - இணைவினை
8. இ. துறைமுறை அமைப்பு
9. ஆ. தாராவணிவாலா
10. இ. ( A ) சரி , ஆனால் ( B ) தவறு
11. ஈ. d e c a
12. இ. மிட்டக்சாரா, தாயபாகா என்பவை கூட்டாண்மையின் இரு சட்டங்கள் ஆகும்.
13. ஆ. அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய அதிகபட்ச பங்கு முதல் 51%
14. ஈ. இவை அனைத்தும்
15. அ. வரையறா பொறுப்பு
16. ஈ. பங்குகளின் மீது செலுத்த பெறாத தொகை
17. ஆ. ஒரு கூட்டுப் பங்கு நிறுவனத்தின் பங்குதாரர் பெறுவது வட்டி.
18. இ. c a d b
19. இ. இந்து வாரிசு சட்டம் -- 1983
20. ஆ. பெயரளவு கூட்டாளி --- பாசாங்கு கூட்டாளி
21. இ. ( A ) சரி , ஆனால் ( B ) தவறு
22. ஆ. பொதுத்துறை நிறுவனங்கள்
23. இ. (ii) மற்றும் (iii) தவறு
24. அ. 6 %
25. இ. பங்காதாயம் பெறுவதிலும் நிறுமம் கலைப்பின்போழ்து பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும்
26. இ. 7
27. அ. நிறுமத்தின் அமைப்பு முறையேடு
28. அ. ₹. 5,000
29. ஆ. 15 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்
30. இ. நிதி பத்திரங்கள்
31. ஆ. கரடி
32. அ. இங்கிலாந்து
33. அ. துறைவாரி அமைப்பு
34. அ. கடனாளர்கள்
35. ஆ. 1956
36. இ. ஆதரவின்
37. ஆ. கடனீட்டுப் பத்திர வெளியீடு
38. ஆ. கூட்டாண்மை



https://www.trbtnpsc.com/2016/10/how-to-attend-creative-and-interior.html

39. ஈ. உழைக்கும் கூட்டாளி - முதலிடும் கூட்டாளி
40. ஈ. ஒருதலைமையும், பல்வேறு திட்டமிடலும் கொண்டது
41. ஈ. ( A ) தவறு, ஆனால், ( B ) சரி
42. இ. இந்து கூட்டுக்குடும்பத்தைப்பற்றி சட்டம் எந்த வரைவிலக்கணமும் தரவில்லை
43. ஆ. துணைத்தரகர்கள்
44. இ. வரையறுத்த கூட்டாண்மை இந்தியாவில் இல்லை
45. இ. பலமிக்கவன் - கர்த்தா
46. ஈ. c a d b
47. ஆ. A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
48. ஈ. அரசு நிறுமத்தில் ஊழியர் அரசு ஊழியர்
49. ஆ. A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
50. ஈ. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்ட ஊக வணிகர் கரடி
51. அ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் சரி
52. இ. 2 மற்றும் 4
53. ஆ. இணைவிணை
54. இ. அரசு நிறுமம்
55. அ. பொது கூட்டாளி
56. ஆ. தங்களுடைய சொந்த நடவடிக்கைகளுக்காக
57. ஆ. துறைமுறை அமைப்பு
58. இ. கூட்டுப் பங்கு நிறுமம்
59. ஈ. மேற்சொன்ன அனைத்தும்
60. ஈ. மேற்சொன்ன அனைத்தும்
61. ஈ. A தவறு ஆனால் R சரி
62. ஆ. A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
63. இ. கூட்டுறவு சங்கங்கள்
64. இ. அரசுத் தொழில்கள்
65. இ. சரக்குகள்
66. ஆ. பதிவுச் சான்றிதழ்
67. ஈ. e a d b
68. ஆ. விருப்பத்தின் பேரில்
69. அ. கட்டாயம்
70. இ. மேலூதியப் பங்குகளை விடுத்தல்
71. அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
72. ஈ. மேற்கண்ட அனைத்தும்
73. இ. c a d b
74. ஆ. திருப்பி செலுத்தக் கூடியது
75. இ. கூட்டுறவுச் சங்கங்கள்

B.BALAJI, PG ASST IN COMMERCE , GHSS, KANCHIPURAM DT, 9629647613